

பருத்தித்துறைப் பொறுப்பாளர்

## வீர வேங்கை

# கப்டன் மொறிஸ்

( தி. பரதராஜன் )


அவர்களின் நினைவாக

கண்ணீரில் மலரும்

கருத்துக்கள் !!!



" தியாகிகளின் சமாதிகளே
ஆராதனைக்குரிய ஆலயங்கள் "



## வீர வேங்கை
## கப்டன் மொறிஸ்

( தீ. பரதராஜன் )

தாயக உதயத்தில்
12-09-1969

மக்களின் உள்ளங்களில்
01-05-1989

" தியாகிகளின் சமாதிகளே
ஆராதனைக்குரிய ஆலயங்கள் "



# வீர வேங்கை
# கப்டன் மொறிஸ்

( தி. பரதராஜன் )

தாயக உதயத்தில்
12-09-1969

மக்களின் உள்ளங்களில்
01-05-1989

# வாழ்க்கைச் சுருக்கம்

தியாகராஜா சிவகாமசுந்தரி குடும்பத்தில் ஆறுவது புத்திரனாக 1969ம் ஆண்டு அவதரித்து, பரதராஜன் என்ற பெயரில் பெற்றோரின் அரவணைப்பில் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்தான். தனக்கென வாழும் சுயநல வாழ்வில் அவனுக்கு விருப்பம் ஏற்படவில்லை. தன் வாழ்வின் மிகுதிப்பகுதி முழுவதையும் தமிழ் ஈழ மண்ணுக்கு அர்ப்பணித்தான். அன்று முதல் மொறிஸ் என்ற இயக்கப் பெயருடன் நடமாடத் தொடங்கினான்.

நான்கு ஆண்டுகள் இயக்கப்பணியில் ஈடுபட்டான். குறுகிய காலப்பகுதியில் மொறிஸ் ஆற்றிய சேவைகள் பல. சிறீலங்கா இராணுவம் தொண்டைமானாற்றில் குடிகொண்டிருந்த காலம். புலிகள் பெருந்தாக்குதல் ஒன்றை இராணுவ முகாம் மீது மேற்கொண்டன மொறிஸ் அத்தாக்குதலை முன்னின்று நடத்தினான். வெற்றியும் கண்டான். இராணுவ வீரரைச் சிதறியோடச் செய்தான்

பருத்தித்துறை இராணுவ வீரரை வெளியேற விடாமல் சென்ரி போட்டுத் தடுத்து வெளிவந்தோரை விரட்டி அடித்த பெருமை மொறிசுக்குண்டு பூநகரி இராணுவ முகாமைத்தாக்கி வெற்றியும் கண்டு காயமும் பட்டான்.

1987ம் ஆண்டு யூலை 29ல் இந்திய அமைதிப்படை இலங்கை மண்ணில் கால்வைத்தது. அமைதி காக்கவந்த இந்தியப்படை புலிகளைத் தேடிக் கண்டு பிடித்துக்கொல்லும் பணியில் ஈடுபடத் தொடங்கியது. வடமராட்சியில் தனக்கென ஒரு இடம்பிடித்துக் கொண்ட மொறிசைத்தேடி இந்தியப்படைவெறி கொண்ட நாய்போல் அலையத் தொடங்கிற்று. கண்ணெதிரில் அகப்பட்டும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து மாயமாய் மறைந்தான். நான்கு ஐந்து தடவைகள் இந்தியப்படைகள் சுற்றிவளைத்தபோது அவர்கள் கண்களை மறைத்துத் தப்பித்துக் கொண்டான்.

தமிழ் ஈழத்தில் மொறிஸ் வைத்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. தேடுதல் வேட்டைக்கு நடுவில் மொறிசின் பணிகள் தொடர்ந்தன. இயக்க வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் செய்துவிட்ட பணிகள் கொஞ்ச நஞ்சமல்ல எண்ணிலடங்காது.

சாதாரண படைவீரனுகச் சேர்ந்த மொறிஸ், கப்டன் பதவிவரை உயர்வு பெற்று மிக மிக ஆபத்தான சூழ் நிலையில் மக்கள் மத்தியில் நடமாடி, இயக்க வளர்ச்சிக்காற்றிய சேவை மதிப்பிடற்கரியதாகும். வெற்றிகள் பலவற்றை ஈட்டி, அளப்பரிய சாதனைகள் பலபுரிந்து மக்கள் மனதில் அழியாத இடம் பெற்றுவிட்டான் கப்டன் மொறிஸ். நாட்டு மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் இடமானுன். தன் சகாக்களை அன்பாக நேசிப்பதில் அவனுக்கு நிகர் அவனேயானன். இயக்கத்திலும் இயக்க உறுப்பினர் மீதும் அவன் கொண்டிருந்த மட்டற்ற அன்பையும் விசுவாசத்தையும் கடைசி நேரத்தில் உறுப்பினர்களுக்குச் சொன்ன சில சொற்கள் அப்பட்டமாக எடுத்துக் காட்டிவிட்டன.

பருத்தித்துறை வாழ் தமிழ்பேசும் மக்கள் அவனை எம். ஓ என்று அன்பாக அழைத்தார்கள். குழந்தைகளும் எம். ஓ வை அறிந்து புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் நடந்து நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுன். பெரியவர், சிறியவர், ஏழை பணக்காரன் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகளைக் கருதாது எல்லாரோடும் அன்பாகப் பழகினுன். மக்களும் அவனை நேசித்தார்கள் அவனும் மக்களை நேசித்தான்.

சூழ்ச்சியின் விளைவு சுற்றிவளைப்பு எப்பக்கம் பார்த்தாலும் படைவீரர்கள் நடுவில் கப்டன் மொறிஸ் களைக்கவில்லை கலங்கவில்லை அஞ்சி ஓடிவிடவில்லை சளைக்காமல் ஒருவர் துணையோடு மட்டும் நின்று போராடி மூவரை வீழ்த்தி தானும் சைனையிட்டுக்கு தன்உடலை அர்ப்பணித்தான் தமிழ் ஈழமண் தமிழ்த்தாய் அவன் உடலைத் தாங்கிக் கொண்டாள்.

தமிழ் மண்ணில் அவன் சேவைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். எம். ஓ. எம். ஓ. என்று நாடே அழத்தொடங்கியது. அழுகுரல் காற்ருேடு கலந்து விண்ணுக்கு அவன் மரணச் செய்தியை எடுத்துச் சென்றது. இயக்கம் தக்க ஒரு செயல் வீரனை இழந்து தவித்தது. பெற்ருேரும் உற்ருேரும் வாய்விட்டுப் புலம்பினர். விண்ணிலே எம். ஓ வுக்கு வரவேற்பு தமிழ்ஈழ மண்ணைக் கண்ணீர் நனைத்துக் கொண்டிருக்கிறது. கண்ணீரால் சுதந்திரம் என்னும் பயிரை மண்ணிலே வளர்ப்போம். மாவீரர்களுக்கு நாம் கொடுக்கும் காணிக்கையும் அதுவே. கண்ணீர் அஞ்சலி, கண்ணீர் அஞ்சலி.

# நம் அருமைச் செல்வமே பரதா!

நம் மண்ணில் சுதந்திரம் கண்டபின்பு
நம் மனையில் இன்பம் காண்போம் என்றாய்!
வாலிப மனதின் ஆசைகள் மறந்து
வீரத் தோள்களில் சுமையை ஏற்றிக் கொண்டாய்!
வீதிகள் தோறும் நடந்து வந்தாய்!
தமிழ் மக்களை மண்ணை காத்து நின்றாய்!
பெற்றவர் உள்ளம் வற்றிவிடாமல்
ஊர் மக்களை உயிராய் மதித்து வந்தாய்!
என்றோ ஒருநாள் வந்திடுவாய்
என்றே நாமும் காத்திருந்தோம்!
ஏற்றிய விளக்கு நாம் பார்த்திருக்கவே!
காற்றுடன் அவிந்து போனதடா!
நம் நெஞ்சங்களும் வெந்து போனதடா!
மகனே மகனே என்றோலமிட்டோம்!
வண்ணச் சிரிப்புடனே நீ மறைந்து விட்டாய்!
மகனே! உன் உடல் அழிந்தாலும்
உன் மாண்புகள் கேட்டு உருகுகின்றோம்!

அன்பு **அப்பா, அம்மா**

# தோழர்கள் அஞ்சலி

தமிழ் மக்கள் துயர் துடைக்கத் துணிவு கொண்டாய்
தமிழ் ஈழம் ஒன்றுதான் சரியான முடிவென்ற
எம் தலைவர் சொற்கேட்டு சரியான முடிவென்று
கண்டுகொண்டு அவர் பின்னால் சென்றாய் எம். ஓ
சொல் அதிலும் செயல் அதிலும் மாறாநெஞ்சம்
இயக்கத்தை உயிர்போல மதித்துப் பேணி
அன்னை தந்தை சகோதரர்கள் உறவையெல்லாம்
துறந்து விட்டுத் தமிழீழம் தன்னில் நீ காதல் கொண்டாய்
அன்னை தந்தை சுற்றத்தார் அன்பையெல்லாம்
தமிழ் மண்ணில் வைத்துவிட்ட மொறிசே கேளாய்
உன் அன்பை மறப்பதற்கோ முடியவில்லை
மே மாதம் மேதினத்தில் மேதினியே கண்கலங்க
சூழ்ந்திருந்த தோழர்களின் இன்னுயிரைக் காப்பாற்றி
தனித்து நின்று போராடி உன் இன்னுயிரை நீத்தனையோ
தமிழ்ஈழம் காணமுன்பே உன் ஆருயிரும் பிரிந்ததுவே
ஊர்மக்கள் திரள் திரளாய் வந்து குவிந்ததுவும்
அவர் விட்ட கண்ணீரால் ஈழமண்ணும் நனைந்ததடா
பெண்கள் பலர் குவிந்து நின்று ஒப்பாரி சொல்லியதை
கேட்டிருந்தால் விழித்திருப்பாய் எம் அருமை எம். ஓ வே
தெருவெல்லாம் தென்னோலை பகலெல்லாம் நள்ளிரவாய்
பார்க்குமிடமெல்லாம் பரோரே இல்லாமல்
வெறிச்சோடி விட்டதடா வீதியெல்லாம் எங்கும்
கண்விழித்துப் பார் எம் ஓ நாங்கள் படுந்துயரை
விம்மி விம்மி அழுகின்றோம் கேட்கிறதா உன்செவிக்கு
எம் தோழர் அங்கே வரவேற்பார் என்றெண்ணி
வீறுநடை போட்டாயோ எமை மறந்து
சாகவில்லை எம் - ஓ நீ சாகவில்லை எம். ஓ
காணுமிடமெல்லாம் தோணுதடா உன் உருவம்
கண்டு களிக்கின்றோம் காமெல்லாம் காண்போம் நாம்
விட்டொழியோம் வீறுகொண்டெழுந்திட்டோம்
கைவிடவும் மாட்டோம் தோழா எம் தமிழீழ லட்சியத்தை
வென்றிடுவோம் தோழா நாம் கண்டிடுவோம் தமிழீழம்.

# என் அருமைத் தம்பியே!

பாலர் வகுப்பிற்கு நான்
பள்ளி சென்ற பருவத்தில்
பிஞ்சுக் கைகளை அசைத்தபடி
அம்மாவின் மடியில் நீ சிரித்தது
எனக் கின்னும் நன்ருக
ஞாபகமிருக்கின்றது!

உன் பஞ்சுப் பாதங்களை
கொஞ்சி மகிழும் நான்
கண் மூடித் திறக்க முதல்
தவழத் தொடங்கிய உன்
சுறு சுறுப்பும் நன்ருக
ஞாபகமிருக்கிறது!

நீ தத்தி நடந்து வந்து
வெள்ளைச் சட்டையிலே
ஐந்து விரல்களையும்
பதித்து விளையாடியதும்
நன்ருக ஞாபகமிருக்கிறது!

எப்படி அவைகளை மறக்கமுடியும்?
கண்ணே!
உன் வண்ணச் சிரிப்பெமக்கு
புத்துணர்வைத் தந்து
இயங்க வைத்திருந்தது
உனக்குத் தெரியுமா?

துள்ளித் துள்ளியே நீ
வளர்ந்து விட்டது
எமக்கு ஆச்சரியம் தான்!
உன் ஆசைத் தம்பியை
எத்தனை நாள் அடித்து விட்டு
அள்ளி அணைத்திருப்பாய்?

பெற்றவள் உன் குறும்பு கண்டு
பச்சைப் பிரம் பெடுத்திட்டால்
கட்டியணைத்து பலகதைகள் சொல்லி
பக்குவமாய் அதைப்
பெற்றிடுவாய்!
உன் குறும்புச் சிரிப்பும்
குதூகல நடையும் தானே
அம்மாவின் கோபங்களையும்
ஆற்றி வைப்பது!

நீ நல்லவனுய் வளர வேணும்
படிக்க வேணும்; பாடவேணும்
பல்கலைக் கழகம் போகவேணும்
பட்டம் பெற வேணும்
நாட்டுக்கு நன்மைகள்
செய்ய வேண்டும் - என்றெல்லாம்
எத்தனை வண்ணக் கனவுகளை
பெற்றவர் உள்ளம்
கண்டிருந்தது?!

கனவுகளெல்லாம் நனவாகி
நல்ல பிள்ளையாய் தலைநிமிர்ந்தாய்!
படித்தாய் பாடினுய்...
பல்கலைக் கழகம் இல்லாமலே
பட்டங்கள் மட்டும்
பெற்று விட்டாய்!
நாட்டுக்கும் நம் இனத்திற்கும்
நன்மை செய்யவே
உறுதி கொண்டாய்!

தூக்கினுய் சுமந்தாய்!
பெற்ற தாய் மண்ணிற்காய்
போர்க் கோலமே பூண்டு விட்டாய்!
போற்றினேர் ஆயிரம்;
வாழ்த்தினேர் ஆயிரம்;
அன்பு மிக்க வீரனென்று
பாடினேர் ஆயிரம்!
கொள்கை வீரனென்று
கோஷமிட்டவர் ஆயிரம்!

நலல நண்பனும்;
அன்புள்ள மைந்தனும்;
பாசமுள்ள பேரனும்;

பருத்தியூரையே பாதுகாக்கும்
பாலனும்!
சின்னக் குழந்தைகட்கு மாமனும்;

மருமகனும் அண்ணனும் தம்பியாம்;
மண்ணுக்கே மன்னவனும்!
எத்தனை ஆயிரம்...
கோஷங்கள் எழுந்தன?!
காதினுள் நுழைந்தன!
இதயங்கள் குளிர்ந்தன!

மே மாதம் முதலாம் நாள்
நடந்த சேதியென்ன?
ஏழைகளின் தலைவனன்றோ!
தொழிலாளர் தினத்தன்று
துரோகம் நடந்ததென்ன?
கண்ணே!
உன்னை மடக்க எதிரிகள் கூட்டம்
ஊரையே வளைத்தனரோ?

நெஞ்சப் துடிப்போடு
தோழர்களை அனுப்பிவிட்டு
இருவர் மட்டும் பின்தொடர
போரைத் தொடங்கினாயோ?
நாலா புறம் நின்ற நரிகள் கூட்டம்
குண்டு மழை பொழிந்து
மண்ணோடு மண்ணாகினரோ?
பருத்தி மண்ணே சிவப்பாக
பேராறொன்று பாய்ந்ததுவோ?!

கண்ணே! நில்;
திரும்பிப் பார் வருகிறார்கள்!
உன் தோழர்களின் காலடிகள்!
நீ வளர்த்த தோழர்களே
வருகிறார்கள்!

உன் பயணம் நின்றிடாமல்
தொடர்கிறார்கள்!
காலங்கள் தூர இல்லை
உன் கனவு நிறை வேறும்!
நிம்மதி கொள்ள சாந்தி பெறு!

**உன் அன்பு இளையக்கா**



# இளநகைப் பரதனே!

குருத்தாய்ச் சிரித்து குமரனாய்த் தரித்து
கருத்தினிலே உரத்து கடமையிலே உயர்ந்து
பெருமைதனைப் பெற்று உடமைகளைத் துறந்த
சிறுத்தையே நீ ஏன் சீற்றங் கெட்டாய்?

கேளாய் மகனே கேட்டிடுவாய் எந்துயரை
பாழாகிப் போனேனும் பக்கமிருந்து உதவவில்லை
ஊழாக வந்தேனும் உன்னுயிரைக் காக்கவில்லை
ஆளாகிய உன்னை ஆட்கொல்லி அழித்தபோது

ஆறுதலாய்க் கண்டு அழுதழுது பேசிடவோர்
அருஞ் சந்தர்ப்பந் தேடி அகமுருகி நின்றோமடா
வீறாக வந்துனக்கு வீண்தொல்லை தரவில்லை - நீயோ
வேறில்லை நேரமென்று வேட்டுடனே சென்றுவிட்டாய்!

யாரடா கொன்றானுனை யாருடைய சொற்கேட்டு
கேளடா நீ சென்ற கேளுநரிலுள்ளோரை - மகனே
கூறடா வந்தெமக்கு குறிப்பாக வென்றாலும் விரைவாகப்
பாரடா வந்தெமது பரிதவிப்பைக் கூறுதற்கு

உன்மரணம் உனக்கு முடிவல்ல! அது வீரசிகரமடா
வேங்கைகளைக் கவரும் வெற்றிப் பாதையடா - பகைவனும்
பாரதத்தானையாண்ட பரதனது பாதுகையாகும் - அதுவே
அண்ணனும் தம்பியும் ஆளும் அரியணையுமாகுமடா!

உன்னை நேசித்துருகும் உறவினர்

# நம் இனிய மைத்துனரே!

உங்கள் தியாகத்தின் மத்தியில் நாம்
வெறும் சுயநலவாதிகளாய் ஆகிவிட்டோம்!
உங்கள் தோள்கள் சுமந்த
துப்பாக்கி எங்கே?
உங்கள் பாதங்கள் தாங்கிய
பாதணிகள் எங்கே?
உங்களைத் தொடர்ந்த இரு
தோழர்களும் எங்கே?
தேடித் தேடிப் பார்க்கின்றோம்
சிவப்பு மண்ணே தெரிகிறது!
மண்ணை அள்ளிப் பார்க்கின்றோம்
உங்கள் வண்ணச் சிரிப்பு தெரிகிறது!
சிவப்பு மண்ணில் உங்கள் சிரிப்பில்
பல களத்தின் கதைகள் தெரிகிறது!
பாதம் நடக்கும் ஓசைகள் கேட்கிறது!
எதிரிகள் உடலை அழித்தாலும்
ஈழமாதா உயிரை அணைத்துவிட்டாள்!
தாய் மண்ணிற்காய் தலைசாய்ந்தவரை
சரித்திரம் என்றும் மறக்காது!

உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
**அன்புமிக்க மைத்துனர்கள்.**

# தோழர்கள் கருத்து

நம்ப முடியாத செய்தி, படையினரின் சுற்றிவளைப்பில் தனித்து நின்று சமர் செய்து வீர சுவர்க்கம் அடைந்தான் ***M. O.*** இச்செய்தி எங்களை ஒரு குலுக்கு குலுக்கி தூக்கிவாரிப் போட்டது. நம்பவில்லை நாங்கள் உன்னைத்தேடி ஓடுகிறோம், ஓடிக்கொண்டே இருக்கிறோம்.

விடுதலை வேட்கை கொண்டெழுந்து சாதனைகள் பல புரிந்து பாரோர் போற்றும் புகழ் மாலைகளை அணிந்து சுதந்திரப் போரில் வீறுநடை போட்டுக் கொண்டிருந்தாய். வல்லரசு தேடும் பெருமை பெற்று விளங்கினாய். இரண்டு ஆண்டுகள் வல்லரசுப் படைகள் நடத்திய சுற்றிவளைப்புகளில் தப்பித்துக் கொண்டாய். வான் புகழ் எய்தினாய். தமிழீழமே உன் கனவாக இருந்தது. நீ வளர்த்த சுதந்திர நெருப்பு அவிந்து விடாமல் நெய்விட்டுக் கொண்டிருக்கிறோம். தமிழீழத்தில் உன் பணி தொடர்கிறது. உன் பெருமை கடல்கடந்து விட்டது. உன் மரணச் செய்தி கணப்பொழுதில் உலகெங்கும் பரவியது. எல்லாராலும் அறியப் பட்டவன் நீ உனக்கென சிறப்பான இடத்தை நீயே ஆக்கிக்கொண்டாய். உன்புகழ் அழியாததாகி விட்டது.

உன் இலட்சியக் கனவுகள் எங்கள் நினைவைவிட்டு நீங்காமல் இருக்கிறது. நீ விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடருகிறோம். தமிழீழம் எங்கள் கண்களுக்குத் தெரிகின்றது அது வெகுதூரத்தில் இல்லை. அதைக் காணும்வரை ஓய்வில்லை உறக்கமில்லை தமிழீழம் காண்போம் என்ற நெஞ்சுரத்தோடு கால்களை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். புலிக்கொடியை ஏற்றுவோம் புகழ்பரப்பி நிற்போம்.

எங்கள் இலட்சியம்
**தமிழீழத் தாயகம்.**

**"களத்தினிற் பொருவேன்; மீண்டு**
**கருத்தினில் வருவேன்!**

விடுதலை யுணர்வு தூண்ட வெம்பக லிரவெ லாநற்
சுடுபொறி கையிற் றாங்கித் துயிலிலா தலைந்தே யந்தக்
கடும்பகை கதற வீழ்த்திக் கண்ணெனக் காத்தாய் வீரா
படுகளத் திறந்தா யென்றாற் பட்டது தமிழர் வாழ்வே!

பற்பல பகைவர் சூழப் படைக்கலப் பயிற்சி தன்னால்
முற்புற நின்ற வீரர் முதுகிட மூவர் தம்மை
வெற்பினை யுருவ லென்ன விரைவினிற் சுட்டு வீழ்த்தி
நற்செரு மலைந்தா யென்று நல்லவர் நவின்று ரப்பா!

இறம்போவாம் வீர னுன்ற னிடப்புற நிற்க மற்று
மறம்பயில் சிறீயா மன்பன் வலப்புறக் போகப் போரில்
அறம்புரி செய்கை காணு வடாவடி யிந்தி யர்கள்
புறம்புற நூருய்ச் சுற்றிப் பொருதுமைக் கொன்று ரந்தோ!

வீழ்ந்தனன் மொறிசு வீர னென்றபோ தன்பர் சென்னி
சாய்ந்தன; நெஞ்சம் வாடித் தளர்ந்தன; புலன்கள் யாவும்
ஓய்ந்தன; உன்றன் கால்க ளுற்றசீ ரிடங்கள் வீதி
ஏய்ந்த நன் மறைவு மெல்லா மிரங்கின வையோ வென்றே!

எடுத்தவன் பொறியு மன்ற னிடக்கையும் களத்தில் வீழ
அடுத்தவ னெறிந்த போதந் நாளரு வரையாங் கைலை
எடுத்தவ னிலங்கை வேந்த னிராவணன் வீழ்ந்தா னென்னப்
படுத்தனை களத்தி லையா படுத்தது தமிழர் செங்கோல்!

"களத்தினிற் பொருவேன்; மீண்டு கருத்தினில் வருவேன்"
என்பாய்
இழைத்தசொ லிகவா மையீண் டிறந்தனை மைந்தா வுன்னை
வளர்த்தவர் கலங்கு கின்றார் மறவர்கோன் றலைவன் றம்பி
களம்பல கண்ட வுன்னைக் கண்ணீரால் வாழ்த்து கின்றான்!

நஞ்சினைக் கழுத்திற் கட்டி நாடது மீட்க வென்று
வெஞ்செரு விருநாட் டோடு விளைத்துநின் றீரெ வர்க்கும்
அஞ்சலி ரும்மை வெல்வோ ரம்புவி யதனி லில்லை
புன்செய லறியீ ருங்கள் புலிக்கொடி பறக்கு மோர்நாள்!

சிந்திய குருதி நீரிற் செவ்விய வீரர் தோன்றி
இந்தியக் கொடியர் தம்மை யெதிர்த்தடித் தோட்டி யெங்கள்
முந்தைய ரீழ மீட்பர் முடிவுமக் கில்லை நீவீர்
அந்தமிழ் மொழிபோ லெங்க ளகங்களி லென்றும் வாழ்வீர்;

# எம் இனிய தம்பி பரதா!

எம் இனிய தம்பிபரதா!
உன் வீரமரணம் கேட்டு
இதயம் நொந்து விட
சேதியோ பொய்யென்று
நம்ப மறுத்து விட்டு
எதேனும் ஓர் கீறல் உன்
காலில் வீழ்ந்திருக்கும்
லாவகமாய் தப்பித்து
ஓடியே சேர்ந்திருப்பாய்
என்றாலும் ஏர் தடவை
கட்டித் தழுவி விட
ஓடியே வந்திட்டோம்
பாதகமாய் சேதிகள்
பலமாக வந்ததும்
திகைத்தோம் திணறினோம்
உண்மையை மறுக்க
உள்ளத்தால் முடியுமா?
உன் உறவைத் தேடியே
ஓடினோம் ஓடினோம்......................
எம் இனிய தம்பி பரதா!
''மொறிஸ் என்ற பெயரில் நீ
முத்தாக விளங்கினாய்
பார் புகழும் வீரனாய்
இவ்வுலகில் வாழ்ந்தாய்
உந்தனது பேரும் புகழும்
''யாரந்த மொறிஸ்'' என்று
புரியாமல் வினவுவார்கள்
''மொறிஸ்'' என்ற நாமத்தால்
கல்லறைக்கு சென்ற இளைஞர்கள்
எத்தனைபேர்
அந்நியப் படையினரால் அடிக்கடி
தேடப்பட்டாய்
ஆனால் அப்மாவி இளைஞர்கள் தான்
அவர்களிடம் அகப்பட்டனர்
நாலாவது வல்லரசா''மொறிஸ்'' ஐ
தேடுதென்று
எத்தனை தடவைகள் என்னிடம்
கூறினாய்
காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்
கூட்டத்தை அழிக்க வேண்டு
மென்பாய்
ஆனால் உனக்கும் ஆவர்கள்
தன் சதி செய்தார்கள்
உன் வீர மரணம் கேட்டு
விண்ணகமே அதிர்ந்ததடா
''மொறிஸ்'' என்ற வீர
சாம்ராஜ்யம்
ஈழ மண்ணில் சாய்ந்ததடா
ஆனாலும் உன்னுடைய பாதைகளில்
இன்னும் ஆயிரமாயிரம் பாதங்கள்
தொடர்கின்றன.

உன் அன்பு
**பிரபாகரா, அத்தான்.**



# என் பிரிய பரதண்ணா!

அன்புக்கும், ஆசைக்கும்
ஒரேஒரு தங்கையாய் நானிருக்க
என்னை விட்டுச் சென்றதேனோ?!

நம்பினீர்களா?!
உங்கள் தங்கை உள்ளம் தாங்குமென்று,
எண்ணினீர்களா?!
உங்கள் தங்கையுள்ளம் பொறுக்குமென்று
அச்சேதி கேட்டவுடன்.......
நம்பவில்லை! நம்பவில்லை!
எப்படி நம்பமுடியும்?!
என் அன்பான அண்ணாச்சே!
எத்தனையோ சுற்றிவளைப்பில்
தப்பிய என் அண்ணன்
இதிலும் தப்பியிருப்பார்!
என்றே நம்பினேனே!

அப்படி இருக்கையிலே;
என் அண்ணன் கோலத்தை.........
கண்ணால் கண்டுவிட்டேன்!
உள்ளமிது தாங்குமா?!
நெஞ்சம் கொதிக்கிறது!
இதயம் தவிக்கிறது!
கண்கள் துடிக்கின்றன!
கண்ணீர் பெருக்கெடுக்கின்றன!
இல்லை! இல்லை! பொய்! பொய்!
கனவாய் இருந்துவிட்டால்
எத்தனை சந்தோஷம்!
நம்பவில்லை! நம்பவில்லை!
நம்ப முடியவில்லை!
என் பரதண்ணா இறக்கவில்லை
வீர சொர்க்கம் சென்றுவிட்டார்!
என்றே என் மனத்தை
தேற்ற முயல்கின்றேன்!

இருந்தாலும் முடியவில்லை!
வேதனையோ என் மனத்தை,
கசக்கிப் பிழிகிறதே!

பரதண்ணு! பரதண்ணு!
எங்கே என் பரதண்ணு?!
என் பரதண்ணுவை - இனி
நான் பார்க்க முடியாதா?!
என் பரதண்ணு இனி
என்னுடன் கதைக்க மாட்டாரா?!
இவ் ஏக்கம் என் மனத்தை,
நிதம் நிதம் குடைகிறதே!

ஆச்சி! ஆச்சி என்று
அன்புடன் எனை அழைத்து;
எண்ணெய் தேய்த்து விடவேண்டும்!
பருக்குற்றி விடவேண்டும்!
நித்திரையாகும்வரை
விசுக்கி விடவேண்டும்! — என்று
எனக்கிடும் கட்டளைகள் .........!
அண்ணன் என்ற ஸ்தானத்திலிருந்து
எனக்குக் கூறும் அறிவுரைகள்.........!
மயிர் கொட்டி கொண்டு வந்து
வீட்டைச் சுற்றி ஓட வைக்கும்
குறும்புச் செய்கைகள்.........!
அத்தனையும் கண் முன்னே
படமாய்! தெரிகிறதே!

சொந்தச் சகோதரங்களையே
உரிமை கோர விடாது
என் தம்பி 'மொறிஸ்'!
என் அண்ணு 'மொறிஸ் அண்ணு'!
என் பாலன் 'மொறிஸ்'! — என்று
தாமே உரிமை கோரி
ஆருத்துயரத்தில் கதறியது
உங்கள் காதில் கேட்டதா?!
நீங்கள் அனுப்பிய
'குட்டிப் புலிகள்' கூட

அச்செய்தி கேட்டவுடன்
"எங்கள் மொறிஸ் அண்ணாவா?!" – என்று
சீறிச் சினந்தெழுந்து
புதுக்களம் அமைப்பதும்
உங்களிற்குத் தெரிகிறதா?!

மக்களை நேசித்தீர்கள்!
தமிழினத்தின் விடிவுக்காய்
ஆயுதம் ஏந்தி
கொடியவர்களின் கொடிய அட்டகாசங்களை
கண்முன்னே கண்டுங் கூட
அச்சம் கொள்ளாது
முன்னேக்கிச் சென்று போரிட்டீர்கள்! — ஆனால்
எம் மனநிலையை மறந்தீர்கள்!
எமை மீளாத்துயரத்தில்
ஆழ்த்தி விட்டுச் சென்றீர்கள்!

வேண்டுகிறேன்! வேண்டுகிறேன்!
தினமும் வேண்டுகிறேன்!
உங்கள் ஆசைகள்;
விரைவில் நிறைவேறும்!

உங்கள் அன்புத் தங்கை
ஆச்சி!



# எமது தலைவர்

ஆழிசூழ் அகிலமெல்லாம் புகழ் பரப்பி
தலைவன் என்ற சொல்லுக்கே இலக்கணமாய்
அமைந்துவிட்ட பெருந்தகையே எம்தலைவா
யாம் செய்த தவப்பயனாய் வந்துதித்தாய்
தலைநிமிர்ந்து நாம் தமிழர் என்று சொல்ல
வகைகெட்டு வழிதவறி வாழ்ந்து வந்த
எம் இனத்தை விடுவிக்க வந்துதித்த
பெருமகனே புகழுதற்குச் சொல்லேயில்லை
பாரறியும் உன் கீர்த்தி
பகரவொண்ணுப் பெருமைகளை விண்மண் பேசும்
உறுதிநிலை தளராமல் வாழ்ந்து விட்டாய்
வழக்குரைக்க யாருண்டிங்கே
கொள்கைக்கு உரமிட்டு உறுதியாக்கி
வீரவேங்கைகளை தோற்றுவித்து உரமூட்டி
சிதருமல் சிந்தாமல் இயக்கமதைக் கட்டிக்காத்து
செயற்திறனை புலப்படுத்தி விட்டாய் ஐயா
வல்லரசும் உன்திறன் வியந்து புகழ்ந்துரைக்கும் புகழுரைகள்
காற்ருேடு கலந்துவிட்ட ஒலி அலைகள்
கேட்கும் ஐயா நம் செவிக்குக் காத்திருப்போம்
பெருமகனே பெருந்தகையே ஒருசொற் கேளீர்
விண்மீன்கள் வெய்யோனை மறைப்பதில்லை
மின்மினிகள் பெருவிளக்கை அவிப்பதில்லை
வெய்யோனை அழிக்க ஒரு சக்தியுண்டா
பகற்கனவு காண்கின்ருர் வல்லரசார்
வெய்யோனின் அறிவொளியில் தமிழரெல்லாம்
ஒன்றிணைந்தோம் ஒரேகுரலில் எம்தலைவர்
தனித்தலைவர் தம்பி பிரபாகரனென்போம்
செந்தமிழா உனக்கொன்று சொல்லுகிறேன்
ஊகித்து உண்மைதனை உணராவிட்டால்
உரிமையற்ற நடைப்பிணமாய் ஆவோமப்பா
அறிந்துணர்ந்து செயற்படுவோம் ஓடிவாரீர்

# சுதந்திரப் போர்

சிங்கத்தின் வாலாயிருப்பதை விட ஈயின் தலையாயிருப்பது மேல், இதுதான் உண்மையான சுதந்திரம். இந்தச் சுதந்திரத்தைப் பெற உயிர்களையும் உடமைகளையும் எமது பெண்களின் கற்பையும் அடைவுவைத்துக் கொண்டிருக்கிறோம் சுதந்திரப் போரில் நிகழும் சர்வசாதாரணமான நிகழ்ச்சிகள். இவற்றிலே நம்மனதை விட்டுவிட்டால் நம் தமிழ் ஈழ இலட்சியம் என்னாகும். நம்லட்சியத்தை நோக்கி கால்களை நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இடையில் நிகழும் துர்ப்பாக்கிய நிகழ்வுகள் துயரத்தை தந்தாலும் தூங்காமல் துணிந்து நிற்போம் இலட்சியத்தை மறக்காமல் கடைப்பிடிப்போம்.

எங்கள் இலட்சியம் "தமிழீழத் தாயகம்"

- ★ நல்ல சர்வாதிகாரம் ஜனநாயகத்திலும் மேலானது
- ★ சுதந்திரம் என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக் கொள்ளும் வஸ்தல்ல போராடிப் பெறவேண்டியது.
- ★ சுதந்திரவேட்கை எல்லா உள்ளத்திலும் கொழுந்து விட்டெரிய வேண்டும்.
- ★ பதவி, பணத்திலே மனதை பறிகொடுத்தவன் லட்சியத்தை காற்றிலே பறக்க விடுகிறான்.
- ★ சுயசிந்தனை இல்லாமல் மாற்றான் மூளையில் தங்கியிருப்பவனுக்கு லட்சியம் என்று ஒன்று இல்லை.
- ★ தீர்க்க தரிசனமான சிந்தனை, மனதிலே உறுதி தோல்விகளைக் கண்டு சோர்வடையா உள்ளம், ஆயுதப் போராட்டம், கொண்ட கொள்கையில் நம்பிக்கை. இவை சுதந்திரம் என்னும் பயிரின் வித்துக்கள்.
- ★ ஆயுத பலத்தைவிட மனோபலம் வலிமை வாய்ந்தது.
- ★ தளராத உறுதியும், மனோபலமும், ஓர்மமும் எந்த வல்லரசையும் நிலைகுலையச் செய்துவிடும்.
- ★ கூலிக்குப் போராடுவதைவிட மண்மீட்புப் போராட்டம் மேலானது உயர்ந்தது.

# மொறிசின் குடும்ப விபரம்

| | |
|---|---|
| தந்தை: | *M. S.* தியாகராஜா<br>(புகையிரத நிலைய அதிபர்) |
| தாய்: | சிவகாமசுந்தரி தியாகராஜா |
| மூத்த சகோதரன் | தி. பிரேமராஜன் |
| மனைவி: | மஞ்சுளா - பிரேமராஜன் |
| மூத்த சகோதரி: | செ. சந்திரவதனா |
| கணவன்: | தெ. செல்வக்குமாரன் |
| இரண்டாவது சகோதரன்: | தி. பார்த்திபராஜன் |
| இரண்டாவது சகோதரி | இ. சந்திரகுமாரி |
| கணவன்: | இ. இரவீந்திரகுமாரன் |
| மூன்றாவது சகோதரி: | க. சந்திரபிரபா |
| கணவன்: | வே. கணேசமூர்த்தி |
| கடைசித் தம்பி: | தி. பாலசபாபதி |
| கடைசித் தங்கை: | தி. குமாரிபாமா |

# நன்றி நவிலல்

எங்கள் மகன் விறல் வேங்கை **கப்டன் மொறிஸ்**
(பரதராஜன்) இறந்த செய்தி கேட்டு ஓடிவந்து
ஆக்க பூர்வமான உதவிகளை செய்த நண்பர்
களுக்கும், உறவினர்களுக்கும் எங்கள்
உளங் கனிந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

*M. S.* **தியாகராசாவும்,**
**குடும்பத்தினரும்.**

